<u>2026 ஜூலை மாதம் 10– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW11 (LW10) – சுருளிவேல்ராஜ் (எ) சுருளிவேல்சாமி |
| தகப்பனார் பெயர்: | ராமக்கிருஷ்ண தேவர் |
| ஊர்: | கடமலைக்குண்டு |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 46 |

10.07.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 3 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் தலைமை காவலர் எண்.287 திரு.J.வேல்முருகன் அவர்களால் அடையாளம் காணப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்தவர் எனக்கு அண்ணன் முறையாவார், எனது சித்தப்பாவின் மகன் ஆவார். சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு செல்லப்பாண்டி காணாமல்

போய்விட்டார் என்று அவரது அண்ணன் ராமராஜ் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதன்பின்பு கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் இருந்து செல்லப்பாண்டியின் பிரேதம் இராமேஸ்வரம் அருகில் மசூதி அருகில் உப்பிளி கிராமத்தில் இருப்பதாக தகவல் சொன்னார்கள். ஜெயராஜ், சென்றாயன், ராமராஜ், அவரது அக்கா கங்காதேவி, ஈஸ்வரி மொத்தம் சுமார் 20 நபர்கள் வேனில் 2020 ம் வருடம் தேதி மாதம், ஞாபகமில்லை, இராமேஸ்வரம் உப்பிளி கிராமத்திற்கு சென்றோம்.

2. காவல்துறையினர் கடற்கரை வழியாக பனங்காட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு கிராம நிர்வாக அலுவலர், மருத்துவர், காவல் ஆய்வாளர், தாசில்தார் ஆகியோர்கள் இருந்தார்கள். ஜே.சி.பி.–யை வைத்து தோண்டினார்கள். தோண்டி சடலத்தை எடுத்தார்கள், அது செல்லப்பாண்டியின் சடலம் என்று சொல்லி தெரியும். அந்த சடலம் அரைகுறையாக தீ வைத்து எரிக்கப்பட்டு, வெந்து வேகாமல் அரைகுறையாக இருந்தது, மருத்துவர் சடலத்தின் மீது பிரேத பரிசோதனை செய்தார்கள். உறவினர் என்ற முறையில் நான் அங்கு சென்றேன். செல்லப்பாண்டியின் மனைவி சித்ரா நீதிமன்ற ஆஜரில் உள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. ஜெயராஜ், ராமராஜ், ஈஸ்வரி ஆகியோர்கள் வேனில் வந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. எனது அப்பாவும், செல்லப்பாண்டியின் அப்பாவும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். கடமலைக்குண்டுவிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் காலை 9.00 மணி இருக்கும். வேனில் சென்றோம் என்றால் சரிதான். வேனின் ஓட்டுநர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. இராமேஸ்வரம் சென்றுவிட்டு காவல்நிலையத்திற்கு மீண்டும் வந்தோமா என்றால் இல்லை.

4. அதன்பின்பு காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சென்று பார்த்தப்போது எலும்புக்கூடு இருந்தது, தலை இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் இராமேஸ்வரத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஜே.சி.பி.யை வைத்து தோண்டியதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எலும்புக்கூடு அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்தது என்றால் சரிதான். சித்ராவிற்கு மூன்று மகன்கள் என்றால் சரிதான். மூத்த மகன் பெயர் ஜெயபாண்டி என்றால் சரிதான். அவர் மனநிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் என்றால் சரிதான். ஜெயபாண்டியன் சித்ராவின் வளர்ப்பில் இருந்தார் என்றால் சரிதான்.

<u>**3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1, 2, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 3 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் அப்படியே ஏற்றுக்கொள்வதாக எடுத்துரைத்ததின்பேரில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.07.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.07.10 18:45:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
10.07.2026